நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.

**முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B(Hons)., L.L.M.,**

நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.

2026 ம் ஆண்டு ஜீலை மாதம் 17 ம் நாள் வெள்ளிக்கிழமை

**குற்றவியல் பல்வகை மனு. 618/2026**

வெங்கடேஷ்,
த/பெ.அழகர்சாமி, ... மனுதாரர்/ உரிமையாளர்/4 ம் எதிரி

/எதிரிடை/

அரசுக்காக சார்பு ஆய்வாளர்
திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலைய
குற்ற எண்.313/2026 ... எதிர்மனுதாரர் / குற்றமுறையீட்டாளர்

இம்மனு கடந்த 08.07.2026 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு 10.07.2026 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு 17.07.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.முருன் B.A., B.L, அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் கற்றறிருந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 திருமதி.P.பெத்துரதி, MBA., B,L,, அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் BNSS பிரிவு 497 மற்றும் 503 ன்– கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் வழக்கு சொத்து பி.ஆர்.எண்.348/2026–ல் உள்ள வழக்கு சொத்துக்களை மனுதாரர் வசம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் மனுவின் சுருக்கம்–**

இவ்வழக்கின் மனுதாரர்/சொத்தின் உரிமையாளர்/4 ம் எதிரி என்றும், மேற்படி வழக்கு பற்றிய முழு விபரம் தனக்கு தெரியும் என்றும், கடந்த 27.06.2026 ம் தேதி என்.சண்முகசுந்தரபுரத்தில் உள்ள ஜெயராம் பயர் ஒர்க்ஸில் அனுமதியின்றி பட்டாசு தயாரித்துக் கொண்டிருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் போலீஸ் பார்ட்டிகள் சகிதம் 14.30 மணிக்கு சென்ற போது அங்கிருந்து ஓட முயன்ற தன்னையும், 5 ம் எதிரியையும் பிடித்து விசாரித்த போது 1 முதல் 3 எதிரிகள் லைசன்ஸ் முடிந்து இரண்டு வருடங்கள் ஆனபோதும் இருமடங்கு கூலி தருவதாக கூறி அரசு அனுமதியின்றி பட்டாசு தயார் செய்ய சொன்னத்தின் பேரில் பட்டாசு தயார் செய்து விற்பனை செய்து வருவதாகவும், மேற்படி தன்னையும் மற்ற எதிரிகளையும் 45 கிலோ எடைகொண்ட அட்டைபெட்டியுடன் கூடிய வெடிகள் மற்றும்

மூலப்பொருட்கள் வாங்க பணன்படுத்திய TN 11 A 8871 என்ற பதிவு எண் கொண்ட TATA VENTURE நான்கு சக்கர வாகனத்தையும் வேளை ஆட்கள் சம்பளக் கணக்கு பார்க்கும் சிறிய நோட் புக் 26ம் அலுவலக கணக்கு பார்க்க பயன்படுத்தும்1 குயர் கோடுபோட்ட நோட் 2ம் கைப்பற்றி தன் மீதும் மற்ற எதிரிகள் மீது குற்ற முறையீட்டாளரால் குற்ற எண்.313/2026 பிரிவுகள் 288BNS r/w 9(B)(1)(a) Indian Explosive Act –ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி நான்கு சக்கர வாகனம் மற்றும் பணம் ரூ.1,22,000/-ம் தனக்கு பாத்தியப்பட்டதாகும், மேற்படி வாகனமும், பணமும் எதிர்மனுதாரரால் கைப்பற்றப்பட்டு எதிர்மனுதாரரின் காவல் நிலையத்தில் தற்பொழுது உள்ளது என்றும், மேற்படி தனக்கு பாத்தியப்பட்ட TN 11 A 8871 என்ற எண்ணுள்ள TATA VENTURE GX 7 SEATER BS III நான்கு சக்கர வாகனம் அதன் இஞ்சின் எண்.475ID18KXYSL8322 மற்றும் அதன் சேசிஸ் எண்.MATA483569CYK26857 அதன் கலர் C Gold என்றும், மேற்படி வாகனம் எதிர்மனுதாரரின் காவல் நிலையத்தில் திறந்த வெளியில் நிற்பதால் வெயிலாலும், மழையாலும் பாதிப்படையக் கூடும் என்றும், மேற்படி வாகனத்தை தன்னிடம் ஒப்படைக்கும் பட்சத்தில் அதனை வைத்து எந்தவித குற்ற செயலில் ஈடுபட மாட்டேன் என்றும், மேற்படி வழக்கு சொத்துக்களை தன்னிடம் ஒப்படைக்கும்பட்சத்தில் நீதிமன்றம் உத்தரவிடும்படசத்தில் திரும்ப ஒப்படைக்க தயாராக இருப்பதாகவும், மேற்படி வழக்கில் கண்ட சொத்தை தன்னிடம் இடைக்காலமாக ஒப்படைக்காத பட்சத்தில் அநேக இழப்பும், இன்னலும் ஏற்படக்கூடும் என்றும், மனுதாரர் வசம் ஒப்படைக்கும் பட்சத்தில் அதனை நீதிமன்றம் இடும் உத்தரவிற்கு உட்பட்டு பாதுகாப்பாகவும் அதன் இயல்பு நிலையிலேயே வைத்திருப்பதாகவும் உறுதியளித்து இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3. அரசு தரப்பில் எதிர்மனுதாரர் தரப்பில் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வழக்கின் சொத்துக்களை மனுதாரரிடம் திரும்ப கொடுக்கும்பட்சத்தில் மனுதாரர் நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகாமல் வெளியூர் சென்றுவிடுவார்கள் என்பதாலும், நீதிமன்ற கோரும்பட்சத்தில் ஆவணங்களை ஆஜர் செய்ய மாட்டார் என்பதாலும், கைப்பற்றப்பட்ட சொத்தினை மனுதாரரிடம் கொடுத்தால் அதனை அவர் செலவு செய்யவும், உருமாற்றம் செய்யவும், அடமானம் வைக்கவும் நீதிமன்ற விசாரணையின் போது ஆஜர்படுத்தாமல் இருக்கவும் வாய்ப்பு உள்ளது என்று கூறி ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

4. மனுதாரர் தரப்பில், மனுதாரரின் ஆவணமான ஆதார் அடையாள அட்டை நகல், ஆர்.சி.புத்தகத்தின் நகல் ஆகியவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. தற்போது நீதிமன்றத்தின் முன்பு எழுந்துள்ள வினா மேற்படியான மனுவை அனுமதிப்பதா வேண்டாமா என்பதே ஆகும்.

6. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மேற்படி வழக்கு சொத்துக்களான பணம் ரூ.1,22,000/- மற்றும் TN 11 A 8871 என்ற எண்ணுள்ள TATA VENTURE GX 7 SEATER BS III நான்கு சக்கர வாகனம் அதன் இஞ்சின் எண்.475ID18KXYSL8322 மற்றும் அதன் சேசிஸ் எண்.MATA483569CYK26857 அதன் கலர் C Gold வாகனம் குற்றமுறையீட்டாளரால் கைப்பற்றப்பட்டுள்ளது. அதனை மனுதாரர் இடைக்காலமாக அவரது வசம் ஒப்படைக்க வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி TN 11 A 8871 என்ற நான்கு சக்கர வாகனத்தின் ஆர்.சி.புத்தகத்தை பரிசீலனை செய்து பார்க்கையில் வாகனத்திற்கு மனுதாரர் தான் உரிமையாளர் என்பது தெரிய வருகிறது. மேற்படி வழக்கு சொத்துக்களை இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு PR.No.348/2026 என வழங்கப்பட்டுள்ளது. அரசு தரப்பில் மேற்படி வழக்கு சொத்துக்களை மனுதாரர் வசம் ஒப்படைக்கப்பட்டால் பணத்தை செலவழித்துவிடுவார் என்றும், மேற்படி நான்கு சக்கர வாகனத்தை விற்றுவிடக்கூடும் மற்றும் சேதப்படுத்தக் கூடும் என்றும், வழக்கு விசாரணையின் போது மேற்படி பணத்தையும், வாகனத்தையும் மனுதாரர் ஆஜர் செய்ய மாட்டார் என்றும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. அரசு தரப்பில் வழக்கு சொத்துக்களான பணம் மற்றும் வாகனம் மனுதாரருடையது தான் என்பது குறித்து ஆட்சேபனை தெரிவிக்கப்படவில்லை. மனுதாரர் அவரது மனுவுடன் தாக்கல் செய்துள்ள உறுதிக்கூற்றில் வழக்கு சொத்துக்களை நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஆஜர்படுத்துவதாக உறுதி கூறியுள்ளார்.

7. மாண்பமை உச்ச நீதிமன்றம் சுந்தர்பாய் அம்பாலால் தேசாய் -எதிர்- குஜராத் மாநிலம் என்ற வழக்கில் சொல்லியுள்ள கோட்பாட்டினை கருத்திற் கொண்டும், மாண்புமிகு ஒரிசா உயர்நீதிமன்றம் லட்சுமண் ஸ்ரீனிவாசன் -எதிர்- ரிபப்ளிக் ஆப் இந்தியா (சி.பி.ஐ) என்ற வழக்கில், குற்ற வழக்குகளில் கைப்பற்றப்பட்ட பணத்தை வழக்கு நிலுவையிலுள்ளபோது திரும்ப ஒப்படைப்பது பற்றி கீழ்கண்டவாறு கூறியுள்ளது.

> "However, the release of money ensures that the seized currency remains in circulation, thereby aiding the national economy. If the money remains stagnant, it serves no practical purpose and fails to contribute to economic activity. Currency is meant to be in circulation to facilitate trade, commerce, and overall economic growth. Keeping large sums of money idle in custody neither benefits the State nor the affected individuals. Instead, it restricts liquidity in the financial system and prevents the owner from utilizing the funds for legitimate purposes".

மேற்படி முன் தீர்ப்புகளில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை கருத்திற் கொண்டும், இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்திற் கொண்டும், மனுதாரர் கோரும்

வழக்கு சொத்துக்களை விசாரணை காரணத்திற்காக மட்டும் நீதிமன்ற பாதுகாப்பில் வைத்திருப்பதால் பலன் இல்லை என்பதை கருத்திற் கொண்டும், கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு மேற்கண்ட வழக்கு சொத்தான பணம் ரூ.1,22,000/- மற்றும் TN 11 A 8871 என்ற எண்ணுள்ள TATA VENTURE GX 7 SEATER BS III நான்கு சக்கர வாகனம் ஆகியவற்றை மனுதாரரிடம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைத்து உத்தரவிடப்படுகிறது.

1. மேற்படி வழக்கு சொத்துக்களுக்கு ஈடாக மனுதாரரும், இரண்டு ஜாமீன்தாரரும் தலா ரூ.7,00,000/-க்கு பிணை பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

2.வழக்கு சொத்துக்களை முழுமையாக காட்டக்கூடிய அனைத்து பரிமானங்களிலிருந்தும் எடுக்கப்பட்ட புகைப்படத்தை தாக்கல் செய்ய வேண்டும். அதற்கான பாரதிய சாக்சய அதினியம் பிரிவு 63-ன் கீழான சான்றிதழை தாக்கல் செய்யவேண்டும்.

3. அசல் வழக்கு முடியும் வரை வழக்கு சொத்தான நான்கு சக்கர வானத்தை விற்பனை செய்யவோ, அடமானம் வைக்கவோ, வேறு வில்லங்க விவகாரத்தில் ஈடுபடுத்தவோ கூடாது.

4. வழக்கு விசாரணையின் போது வழக்கு சொத்துக்களை ஆஜர்படுத்த வேண்டும்.

5. வழக்கு சொத்துக்களுக்கு பஞ்சநாமா தயார் செய்து தாக்கல் செய்யப்பட வேண்டும்.

6. வழக்கு சொத்தான TN 11 A 8871 என்ற எண்ணுள்ள நான்கு சக்கர வாகனத்தின் அசல் ஆர்.சி.புத்தகத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

இந்த உத்தரவு என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆண்டு ஜீலை திங்கள் 17 ம் நாளாகிய இன்று அவையறிய பகரப்பட்டது.

-Sd/-Ms.T.Subashini-
நீதித்துறை நடுவர் எண்2,
திருவில்லபுத்தூர்